**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.1151/2022**

**Deposition of LW–1/PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | நிதர்சனா | **Age** | : | 26/2026 |
| **Husband Name** | : | சிவராஜ் | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | இல்லத்தரசி |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **23/03/2026.**

1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1) நான் போடிநாயக்கனூரில் வசித்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு நான் கீழத்தெருவில் உள்ள எனது அப்பா வீட்டில் இருந்த போது மாலை 06.00 மணியளவில் தெருவில் உள்ள குழாயில் தண்ணீர் பிடிப்பதற்காக சென்றபோது, எங்கள் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் குடியிருக்கும் கண்ணத்தாள் என்பவரின் வீட்டு சாக்கடையில் குப்பை கிடந்தது. அந்த குப்பையானது பக்கத்தில் குடியிருக்கும் ரமா வீட்டின் சாக்கடையில் இருந்து கண்ணத்தாள் வீட்டின் சாக்கடைக்கு வந்தது.

2) அதற்கு கண்ணத்தாளும் ரமாவும் என்னிடம் வந்து பிரச்சனை செய்தனர். ரமா என்னை கைகளால் அடித்தார். நான் வீட்டிற்குள் சென்றபோது ரமா பின்னால் வீட்டிற்குள் வந்து வீட்டிற்குள் இருந்த நாற்காலியை எடுத்து என்னை அடித்தார். மீண்டும் கைகளால் அடித்தார். அதன்பிறகு ரமாவின் சின்ன மகள்

சியாமளா சத்தம் கேட்டு வந்து அவரை விலக்கிவிட்டார். அதன் பிறகு நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எதிரிகள் ஆஜராகி, குறுக்குவிசாரணை இல்லை எனத் தெரிவித்ததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.03.23 18:18:27 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**